**சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் மன்றம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மன்றத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிதியத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக மன்றத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிதியத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நிதியத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பது தொடர்பான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல் முகாமைத்துவத்தினை பொதுவான மற்றும் நிர்ணயிக்கப்பட்ட அதிகாரத்துடன் அமுல்படுத்துதல் தொடர்புபட்ட அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்குத் தேவையான வகையில் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தல் மற்றும் சொத்துக்களுக்கான கணக்களி தன்மையினைப் பேணுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் விசேடத்துவமான அதிகாரத்துடன் மாத்திரம் சொத்துக்களை அணுகுதல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களுக்கான கணக்களிதன்மையினைப் பேணி சொத்துக்களுடன் நியாயமான காலப்பகுதியின் போது ஒப்பீடு செய்தல் மற்றும் வித்தியாசம் காணப்படுமாயிருந்தால் அவை சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் முதலியவற்றிற்காக நியாயமான உறுதிப்பாட்டினைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான ‘‘சிறப்பாகத் திட்டமிடப்பட்ட’’ உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினால் பேணுதல் அத்தியாவசியமானதாகும்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடனான இணக்கமின்மைகள்

| உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பிரகாரம் நிறுவனமொன்றின் சொத்துக்கள் அந்நிறுவனத்தினால் நிர்வகிக்கப்பட வேண்டியிருந்ததுடன் நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அந்த சொத்துக்கள் பயன்படுத்தப்படல் வேண்டும். மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு | அவதானிப்பில் காண்பிக்கப்பட்டுள்ள தொகைகள் சரியானதாகும். | இந்த நிதியம் தனியான நிறுவனமாக இருந்தமையால் நிதியத்தின் பயன்பாட்டிற்காக ஈடுபடுத்தப்படுகின்ற சொத்துக்கள் மாத்திரம் அந்த நிதியத்தின் கீழ் |

| | | |
|---|---|---|
| நடைமுறையல்லா சொத்துக்களின் இழிவுப் பெறுமதி ரூபா 44,203,144 ஆக அறிக்கையிடப்பட்டிருந்த போதிலும் அந்த சொத்துக்கள் நிதியத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்படாமல் இலங்கை சுங்கத் திணைக்களத்தால் அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றமை அவதானிக்கப்பட்டதுடன் இந்த சொத்துக்களுக்குரியதாக மீளாய்வாண்டின் பெறுமானத்தேய்வின் அளவான ரூபா 5,305,911 தொகை நிதியத்தின் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்கு குறிப்புக்களின் பிரகாரம் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வுக் கொள்கை நேர்கோட்டு பெறுமானத்தேய்வு முறைமையாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் குறைந்து செல்லும் மீதி முறையின் அடிப்படையில் பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டிருந்ததுடன் அந்தக் கொள்கையின் மாற்றம் தொடர்பாக எந்தவொரு வெளிப்படுத்தலும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்பு சரியானதாகும். ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு கொள்கை முன்னைய ஆண்டின் போது குறைந்து செல்லும் மீதி அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் 2.8 குறிப்பில் அது தவறுதலாக நேர்கோட்டு முறையாக காண்பிக்கப்பட்டுள்ளதுடன் அது குறைந்து செல்லும் மீதி முறைமையாக சரிசெய்யப்பட வேண்டுமென அறிக்கையிடுகின்றோம். | சரியான பெறுமானத்தேய்வு முறைமையை பின்பற்றி வருடாந்த பெறுமானத்தேய்வு கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) இழிவுப் பெறுமதி பூச்சியமாக இருந்த போதும் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்படுகின்ற கிரயம் ரூபா 22,258,264 ஆன ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | தொலைக்காட்சி இயந்திரங்கள் மற்றும் 2015 ஆம் ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட உதிரிப்பாகங்கள் 7 வருடங்களை விஞ்சியிருந்தது. கணனி மென்பொருள் 2016 ஆம் | தொடர்ந்தும் பயன்படுத்த முடியுமான நிலையில் காணப்படுமாயின் பொருத்தமான முறையை பின்பற்றி கணக்கீடு செய்தல் |

| | | |
|---|---|---|
| மீள்மதிப்பீடு செய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் அறிக்கையிடப்பட்டிருந்தது. | ஆண்டிலும், அதற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட துணைப் பாகங்களாக இருந்தமையால் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பழைய துணைப் பாகங்களாக இருந்ததுடன் உத்தரவாதக் காலமும் முடிவடைந்திருந்தது. அதனால் அந்த சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்தல் நடைமுறை ரீதியில் இல்லை என அறிக்கையிடுகின்றோம். | வேண்டும். |

### 1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் திணைக்கள புத்தகங்கள் மற்றும் திறைசேரி புத்தகங்களுக்கிடையே ஆரம்ப மீதியில் ரூபா 2,122,369 வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 2018 ஆம் ஆண்டிற்கு முன்னிருந்து காணப்படுகின்ற வேறுபாடாகும். தற்போது இந்த வேறுபாட்டை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் போது தரவுகளுக்கிடையே ஏதாவது வேறுபாடுகள் காணப்படுமாயின் அவ்வேறுபாடுகளை இணக்கம் செய்து நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 855,371,840 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 445,228,992 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 410,142,848 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு விற்பனை வருமானம் மற்றும் தண்டப்பண வருமானம் முறையே ரூபா 152,542,726 இனாலும், ரூபா 250,605,474 இனாலும் அதிகரித்தமை மற்றும் நானாவித செலவினம் ரூபா 22,422,429 இனால் குறைவடைந்தமை என்பன பிரதான காரணங்களாக இருந்தன.

## 3. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 3.1 வருடாந்த செயலாற்றல்

பல்வேறு சுங்கத் தவறுகளுக்காக விதிக்கப்படுகின்ற தண்டணைப் பணம் மற்றும் அரசுடமையாக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்ததால் கிடைக்கின்ற பணத்தில் 20 சதவீதத்திற்கு சமமான பண அளவு இந்த நிதியத்தில் செலவு வைக்கப்படுவதுடன் சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 153(ஆ) 1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் பணிகள் பின்வருமாறு இருந்தது.

- சுங்க முகாமைத்துவத்தின் செயற்திறனை மேம்படுத்துவதற்காக சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு தென்படுகின்ற வசதிகளை வழங்குவதற்காக செலவினங்களைச் செய்தல்.

- நிரந்தரமாகவோ அல்லது முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஊனமுற்றோர் அல்லது தற்காலிகமாக இயலாமைக்கு உட்பட்டிருக்கும் சுங்க உத்தியோகத்தர்களுக்கு இழப்பீடு செலுத்துதல்.

- இந்த சுங்க உத்தியோகத்தர்கள் மரணமடையும் போது அவர்களின் சட்டரீதியான வாரிசுகளுக்கு இழப்பீடு செலுத்துதல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுதல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ செயற்திறனை மேம்படுத்துதல் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு இழப்பீடு செலுத்துவதற்காக குறித்துரைத்த குறிகாட்டிகள் மற்றும் எதிர்காலத்தில் எதிர்பார்க்கப்பட்டஇலக்கிடப்பட்ட செலவினங்களை சரியாக திட்டமிடாமல் இந்த நிதியத்திற்கு பணம் ஒதுக்கப்பட்டமையால் நிதியத்தின் திரண்ட மீதி வருடாந்தம் தொடர்ச்சியாக அதிகரிக்கும் போக்கு அவதானிக்கப்பட்டது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,775 மில்லியன் தொகையான நிதியத்தின் திரண்ட மீதி 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 8,611 மில்லியன் வரை ரூபா 836 மில்லியனால் அதாவது 11 சதவீதத்தினால் அதிகரித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது. நிதியத்தின் திரண்ட மீதி தொடர்ச்சியாக அதிகரிப்பதற்காக பின்வரும் காரணங்களும் அடிப்படையாக தாக்கமளித்திருந்தது. | சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சுங்க புலனாய்வுகளில் விற்பனை மற்றும் தண்டப்பணம் மூலம் விதிக்கப்பட்ட தண்டப்பணங்களில் உரிய செலவினங்கள் இருக்குமாயின் அதனை கழித்ததன் பின்னர் 20 சதவீத அளவு இந்த நிதியத்தில் செலவு வைக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் திரண்ட மீதியொன்று நிதியத்தில் உள்ளதுடன் வருடாந்தம் அதிகரிக்கும் போக்கில் மீதி அதில் ஒன்று சேர்கின்றது. அதன் பிரகாரம் நிதியத்தின் பெறுமதி வருடாந்தம் உயர்வடைகின்றது. 2021.12.31 இல் உள்ளவாறு கணக்கின் மீதி ரூபா 8,566 மில்லியன் ஆகும். காணப்படுகின்ற கணனி மற்றும் ஏனைய தொழில்நுட்ப அபிவிருத்திகளை பயன்படுத்தி மிகவும் திட்டமிடப்பட்டதாக குழுவொன்றினால் மோசடி மற்றும் முறைகேடுகள் மேற்கொள்ளல் ஒட்டுமொத்தமாக உலகம் முழுவதும் அதிகரித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. | சுங்க கட்டளைச் சட்டம் தற்போது வரையில் 153 வருடங்கள் பழைமையாக இருந்ததுடன் அந்தக் காலத்தில் காணப்பட்ட இறக்குமதி, ஏற்றுமதி நிலைமையின் அடிப்படையில் அந்த சட்டம் தயாரிக்கப் பட்டிருந்தது. எனினும் தற்போதைய நிலைமையை கவனத்தில் கொண்டு தற்போதைக்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அதன் பிரகாரம் எமது நாட்டிலும் இவ்வாறன மோசடியாக பணம் உழைத்தல் அதிகரித்துச் செல்லும் போக்கான நிலைமையில் சுங்க மோசடியாளர்களை குறைப்பதற்கு எதிர்பார்த்தல் இயலாததாக இருந்தது. | |
| (i) | சுங்க வரி மோசடியை கட்டுப்படுத்துவதற்காக போதியளவான நடவடிக்கை பின்பற்றப்படாமை காரணமாக ஏற்படுகின்ற பல்வேறு சுங்கத் தவறுகளுக்காக உத்தியோகத்தர்களுக்கு வெகுமதி செலுத்துவதற்கு ஏற்படுகின்றமையால் அதில் 20 சதவீதத்திற்கு சமமான சதவீதம் ஒன்று இந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்டமையின் காரணமாக இந்த நிதியம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. கடந்த 10 வருட காலத்தில் நிதியத்திற்கு கிடைத்த 2740 சுங்க புலனாய்வுகளில் இந்த நிதியத்திற்கு பணம் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அப்பெறுமதி ரூபா 6,922 மில்லியன் அளவாக இருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். | உத்தியோகத்தர் களின் செயற்திறனை மேம்படுத்துவதற்காக தற்போதைய நிலைமைக்கு ஈடுகொடுக்கின்ற முறைமையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ii) | சுங்கத் தவறுகளுக்காக தண்டனை விதிக்கும் போது இழக்கப்பட்ட அரசாங்கத்தின் வரி வருமானமும் அந்த தண்டப்பணத்தின் ஒரு பகுதியாக கவனத்தில் கொண்டு அந்த தண்டப் பணத்தை அடிப்படையாகக் கொண்டு உத்தியோகத்தர்களின் வெகுமதி தீர்மானிக்கப்பட்டமையின் காரணமாக ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட வேண்டிய அரசாங்க வருமானத்தில் இழக்கப்பட்டு சுங்க உத்தியோகத்தர்களுக்கு | அந்த தவறுகளை வெளிப்படுத்துவதற்கு உத்தியோகத்தர்கள் சூட்சுமமாக நடவடிக்கை எடுத்ததனாலேயே சுங்கத் தவறுகளை தண்டனையாக விதிப்பதற்கு முடியுமாக இருந்தது. அவ்வாறு சூட்சுமமாக இந்த தவறுகள் வெளிப்படுத்தப்படாதிருக்கு மாயின் அந்த சம்பவத்திற்குரிய மொத்த வருமான அளவும் சிலவேளை அரசாங்கத்திற்கு இழக்கப்படுகின்ற தொகையாக இருக்கும். | சுங்கத்தவறுகள் ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே வெளிப்படுத்துதல் சுங்க உத்தியோகத்தர் களின் கடமையாக எழுந்திருந்தது. ஆரம்ப சந்தர்ப்பத்தின் போது சுங்கத் தவறுகள் வெளிப்படுத்தப் படாமையின் காரணமாக பின்னைய சந்தர்ப்பங்களின் போது மீண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்ட வெகுமதி பணத்தின் அளவு உயர்வடைந்து சென்றதால் இந்த நிதியத்திற்கு ஒதுக்கப்படுகின்ற பணத்தின் அளவில் அதிகரிப்பு ஏற்பட்டிருந்தது. | எனினும் உத்தியோகத்தர்களின் திறமையின் அடிப்படையில் சுங்கத் தவறுகளை கண்டுபிடிப்பதற்கு முடியுமாக இருந்தமையால் சேகரிக்கப்பட்ட பணத்தில் 30 சதவீத அளவு அரசாங்கத்திற்கு கிடைக்கின்றமையால் அரசாங்கத்தின் வருமானத்தில் ஏதேவொரு அளவில் பங்களிப்பு கிடைப்பதுடன் உத்தியோகத்தர்கள் சுங்கத் தவறுகளை பிடிப்பதற்காக ஏற்படுகின்ற முயற்சிகளும் உயர்மட்டத்தில் பேணிச் செல்ல முடியமாக உள்ளது. | சுங்க உத்தியோகத்தர்கள் புலனாய்வினை மேற்கொண்டு தண்டப்பணம் மற்றும் அரசுடமையாக்கப் பட்ட பொருட்கள் விற்பனையால் கிடைக்கின்ற பணத்தில் 70 சதவீதமும் ஒன்றிணைந்த நிதியத்திற்கு அனுப்பாமை தொடர்பாக மீளாய்வொன்றை மேற்கொண்டு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | தற்போது காணப்படுகின்ற சுதந்திர பொருளாதார கொள்கையின் காரணமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிகளில் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமைக்கு ஈடுகொடுக்கும் வகையில் சுங்க கட்டளைச் சட்டம் மற்றும் உரிய நிதியங்களின் சட்டரீதியான ஏற்பாடுகளை முறையாகவும் நாளதுவரையாகவும் திருத்தாமை இந்த அதிகரிப்பிற்காக அடிப்படையாக தாக்கமளித்திருந்தது. | விரிவான அறிக்கையொன்று வழங்கப்படாதிருந்ததுடன் மேலும் கலந்துரையாடுவதற்கு உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | சுங்க கட்டளைச் சட்டம் இதுவரையில் 153 வருடங்கள் பழைமையானதாக இருந்ததுடன் அந்தக் காலத்தின் போது காணப்பட்ட இறக்குமதி, ஏற்றுமதி அடிப்படையில் இந்த சட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அது தற்போதைய இறக்குமதி, ஏற்றுமதி நிலைமையை கருத்தில் கொண்டு தற்போதைக்கு ஈடுகொடுக்கின்ற வகையில் காணப்படும் சட்டம் திருத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் நிதியத்தின் வருமானம் ரூபா 897 மில்லியனாக இருந்த போதிலும் நிதியத்தின் அடிப்படை நோக்கத்திற்காக செலவிடப்பட்ட பணம் ரூபா 41 மில்லியன் ஆகும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகின்றோம். இந்த நிதியத்தின் அடிப்படை நோக்கமாக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளை உள்ளடக்கிய சகல செலவினங்களையும் செய்தல் நாட்டில் காணப்பட்ட கொரோனா | சட்டத்தை திருத்த வேண்டியிருந்தமை மற்றும் சுங்க உத்தியோகத்தர் களுக்கு இழப்பீடு செலுத்துதல் மற்றும் ஊழியர் நலன்களை மேம்படுத்துவதற்காக தற்போதைய நிலைமைக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | தொற்றுநோயின் நிலைமையின் அடிப்படையில் நாடு அவ்வவ்போது மூடப்பட்டமையால் திட்டமிடப்பட்ட பிரகாரம் அந்த செயற்பாடுகளுக்காக உத்தியோகத்தர்களை ஈடுபடாமை, வெளிநாட்டு பிரதிநிதிகள் வருகை தராமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. இந்த நிலைமையை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்ய முடியாத விசேட நிலைமையாக இருந்ததை மேலும் அறிக்கையிடுகின்றோம். | ஈடுகொடுக்கின்ற முறைமையொன்றை அறிமுகப்படுத்தல் வேண்டும். |
| (இ) | இந்த நிதியத்தின் அடிப்படை நோக்கங்களில் ஒன்றாக சுங்க உத்தியோகத்தர்கள் தமது கடமைகளில் ஈடுபடுகின்ற போது ஏற்படுகின்ற இடர்களுக்கு இழப்பீடு செலுத்துதல் இனங்காணப்பட்டிருந்த போதிலும் பரீட்சிக்கப்பட்ட கடந்த 08 வருட காலப் பகுதியில் அவ்வாறான எந்தவொரு இழப்பீடு செலுத்துதலும் அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மேலும் இந்த நிதியத்திற்கு அசாதாரணமாக நிதி சேகரித்தல் இடம்பெறுகின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | மேற்கூறப்பட்ட 08 வருட காலங்களில் அவ்வாறான இடர்களுக்காக இழப்பீட்டு கோரிக்கை எதுவும் கிடைத்திருக்கவில்லை. மேலும் சுங்கத் தவறுகளை பிடிப்பதற்கு அதிக முயற்சி எடுக்கும் நடவடிக்கைகளில் உளப்பூர்வமாக ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களுக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்படுகின்றமையால் அந்த உத்தியோகத்தர்களுக்கு ஏற்படும் உயிர் ஆபத்துக்களையும் கவனத்தில் கொள்ளாமல் கடமைகளுக்காக அர்ப்பணிப்பதற்கு இவ்வாறான நிதியத்தில் கணிசமான பணம் காணப்படுதல் காப்புறுதி நிதியமொன்றைப் போல் அவர்களின் குடும்பங்களுக்கு சிறந்த பாதுகாப்பொன்றாக உறுதிப்படுத்தப்படுகின்றது. அந்த உத்தியோகத்தர்களின் கடமைகளை நிறைவேற்றும் போது உயிர் அச்சுறுத்தல்களை கவனத்தில் கொள்ளாமல் கடமைகளுக்காக | சுங்க சட்டத்தை திருத்த வேண்டியிருந்ததுடன் சுங்க உத்தியோகத்தர்களுக்கு இழப்பீடுகளை செலுத்துவதற்காக தற்போதைய நிலைமைக்கு ஈடுகொடுக்கின்ற முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | அர்ப்பணிப்பதற்கு ஊக்குவிப்பு வழங்கப்படுகின்றது. அவ்வாறே இந்த நிதியத்திற்கு இவ்வாறு நிதி ஒதுக்குதல் சுங்க கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது என மேலும் அறிக்கையிடுகின்றோம். | |

**3.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது நிதியத்தில் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் மற்றும் உள்ளபடியான செலவினங்களை ஒப்பீடு செய்யும் போது 7 செலவின விடயங்களில் 41 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையின் காரணமாக பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாக ஈடுபடுத்தப்பட்டமை அவதானிக்கப்படவில்லை. | அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ள தொகைகள் சரியானதாகும். இந்த நிதியத்தின் அடிப்படை நோக்கமான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளை உள்ளடக்கிய சகல செலவினங்களையும் செய்தல் நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநோய்க்கு இடையே நாடு அவ்வவ்போது மூடப்பட்டதன் அடிப்படையில் திட்டமிடப்பட்ட படி அந்த செயற்பாடுகளுக்காக உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்படாமை மற்றும் வெளிநாட்டு பிரதிநிதிகள் வருகை தராமையால் இந்த நிலைமை ஏற்பட்டிருந்தது. இந்த நிலைமையை முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்ய முடியாத விசேட நிலைமையாக இருந்ததை அறிக்கையிடுகின்றோம். | பாதீடு தயாரிக்கும் போது சரியான பிரகாரம் தேவையினை இனங்கண்டு தேவையான நிதியேற்பாடு வழங்கப்படல் வேண்டும். |